**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No. 122-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-1 , LW 1 | |
| Name | : மோகன் | Defence | : |
| Father Name | : நாராயணசாமி | Court | : |
| Village | : அகணி | | |
| | Taluk | :Sirkali | |
| Calling | : | Religion | : |
| Age | : 52/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 19.03.2024 தேதி காலை 8.00 மணியளவில் எனது அம்மா எங்கள் வீட்டு வேலி அருகில் குப்பையை கொட்டினார்கள். அதற்கு எதிரி தகாதவார்த்தையால் எங்கள் அம்மாவை திட்டினார்கள். அன்றைய தினம் 07.00 மணியளவில் எனது அப்பா எதிரி பாரிவேந்தனிடம் எங்கள் வீட்டு இடத்தில் தானே கொட்டினோம் எதற்காக திட்டுகிறாய் என்று கேட்டதற்கு என் அப்பாவை பாரிவேந்தன் குச்சிகாரி மகனே , தேவுடியா மகனே என்று திட்டி கிழே தள்ளி முதலில் கையால் அடித்தார் அதன் பிறகு எதிரி வைத்து இருந்த கத்தியால் எனது அப்பாவின் தலையில் கொத்தி உள்ளார். எனது அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அடுத்த 10 வது நிமிடத்தில் நான் அகணியில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு சென்று விட்டேன். எனது அப்பா வீட்டிற்கு பக்கத்து விட்டில் வசித்து வரும் பாரிவேந்தனை என் அப்பாவை அடித்ததை நான் தட்டி கேட்டபோது எதிரி என்னை குச்சிகாரி மகனே , தேவுடியா மகனே என்று திட்டி இரும்பு கம்பியால் வலது தோள்பட்டையிலும் வலது விலாவிலும் மற்றும் இடது முழங்காலிலும் தாக்கினார் அங்கு கிடந்த பாரையால் என் தலையின் பின் பகுதியில் தாக்கினார். எனது மூத்த மகன் மற்றும்

ஊரில் உள்ளவர்கள் சீர்காழி மருத்துவமனையில் சேர்த்தனர். எதிரி தாக்கியதில் எனக்கு தோள்பட்டையிலும் மற்றும் விலா எழும்பிலும் முறிவு ஏற்பட்டது. ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No. C.C. No. 122-2024</u>**

Deposition of Prosecution: P.W-2 , LW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : நாராயணசாமி | Defence | : |
| Father Name | : கிருஷ்ணன் | Court | : |
| Village | : அகணி | | |
| | Taluk | :Sirkali | |
| Calling | : | Religion | : |
| Age | : 82/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.08.2024.
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது காலையில் எனது மனைவி எங்களது இடத்தை கூட்டி குப்பையை எங்கள் இடத்தில் கொட்டினார். எனது பக்கத்து வீட்டில் வசித்து வரும் பாரி என்பவர் குப்பையை கொட்டியது தொடர்பாக என்னை வெளியே வாடா என்று தகராறு செய்து குச்சிகாரி மகனே , தேவுடியா மகனே என்று திட்டினார். என்னை ஊரை விட்டு கிளப்பிவிடுவதாக சொன்னார். பின்னர் எனது மனைவியிடமும் பேரப்பிள்ளையிடமும் தகராறு செய்தார். அன்றைய தினம் மாலை 07.00 மணியளவில் எதிரி பாரையால் நான் திரும்பும் போது என்னை அடித்துவிட்டார். எதிரி தாக்கியதில் மருத்துவமனையில் நான் ஒருவார காலம் சிகிச்சை எடுத்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை முடிகக்ப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**</u>

<u>**SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

<u>**Case No. C.C. No. 122-2024**</u>

Deposition of Prosecution: P.W-3 , LW 4

Name : சிவா Defence :

Father Name : மோகன் Court :

Village : அகணி

Taluk :Sirkali

Calling : Religion :

Age : 24/2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.03.2024 அன்று காலை 07.00 மணியளவில் எனது பாட்டி எங்களது இடத்தை கூட்டி எங்களது இடத்தில் குப்பையை கொட்டியதற்காக எனது இடத்தில் குப்பையை கொட்டி உள்ளாயா என்று அவையில் கூற முடியாத வார்த்தைகளால் திட்டி எனது பாட்டியிடம் தகராறு செய்தார். அப்போது வீட்டில் எனது தாத்தாவையும் திட்டி பாரையால் தலையில் தாக்கினார். கத்தியால் வலது புற தோள் பட்டையில் கொத்தினார். அன்றைய தினமே மாலை 07.15 மணியளவில் பாரி தகராறு செய்ததாக ஊர்காரர்கள் எனது அப்பாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லி எனது பாட்டி வீட்டிற்கு எனது அப்பா வந்தார். எனது அப்பா எதிரியிடம் கேட்டபோது எதிரி பாரையால் எனது அப்பாவின் தலையிலும் இடது முழங்கால் மற்றும் கையிலும் தாக்கினார். எதிரி தாக்கியதில் எனது அப்பாவிற்கு தஞ்சாவூர் மருத்துவமனையில் தையல் போடப்பட்டு உள்ளது அங்கு ஒரு வார காலம் சிகிச்சை எடுத்து கொண்டார் எனது தாத்தா சீர்காழி அரசு மருத்துவமனையில் தங்கி ஒரு வார காலம் சிகிச்சை எடுத்து கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**